## மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத்துறை அமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு

NO: 531 17.08.2007

வருவாய்த் துறை பணிகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத்துறை அமைச்சர் அவர்களால் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் வருவாய்த் துறை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தியுள்ளபடி வரும் 31–3–2008க்குள் 3 இலட்சம் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க உறுதி செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது (31–7–2007வரை) 58 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டிருந்தது. இன்றைய தினம் வரை கூடுதலாக 17 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் இன்றுவரை 75 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 31–3–2008க்குள் 3 இலட்சம் ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குகின்ற பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் நான்கு கட்டமாக இதுவரை 91,576 விவசாய குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 1623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாவது கட்டமாக வருகின்ற 17–9–2007 அன்று இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்திற்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 3 இலட்சம் ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா 31–3–2008 க்குள் வழங்கப்பட்டு விடும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.